# அமெரிக்காவில் அண்ணா!



**முதல்வராகப் பொறுப்பேற்ற அண்ணா வெளிநாடுகளில் மேற்கொண்ட பயணங்களில் அமெரிக்கப் பயணம் முக்கியமானது. எழுத்தாளர் எம்.எஸ். உதயமூர்த்தி தன்னுடைய ‘அமெரிக்காவில் அண்ணா’ நூலில் இதைப் பதிவுசெய்திருக்கிறார். தமிழர்களைத் தாண்டியும் இந்தியச் சமூகத்திடம் அண்ணாவின் அமெரிக்க வருகை ஏற்படுத்திய தாக்கம், அங்கு அவருக்குக் கிடைத்த பிரம்மாண்ட வரவேற்பு, யேல் பல்கலைக்கழகத்தில் மாணவர்களுடன் அவர் பங்கேற்ற கலந்துரையாடல் என எல்லாவற்றையும் இந்நூலில் ஆவணப்படுத்தி இருக்கிறார் எம்.எஸ். உதயமூர்த்தி. அதிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட சில பகுதிகளை இங்கே தருகிறோம்.**

யேல் பல்கலைக்கழகத்தில் தகவல் இலாகாவின் மாடியில் அண்ணா நிருபர்களைச் சந்திப்பார் என்று தகவல் வருகிறது. அமெரிக்காவில் அண்ணா முதன்முறையாக நிருபர்களைச் சந்திப்பது இதுதான். நியூ யார்க்கிலிருந்து பிடிஐ. ‘ஹிந்துஸ்தான் ஸ்டாண்டர்டு, ‘ஏபி’: ‘யுபிஐ : ‘இந்தியன் எக்ஸ்பிரஸ்’ ஆனந்த விகடன், ‘நியூ ஹேவன் ரிஜிஸ்தர்’, ‘ஏர் டெய்லி நியூஸ் ஆகியவற்றின் நிருபர்கள், போட்டோகிராபர்கள் ஆக ஒரே கூட்டம்! ‘ஏன் இவரை அழைத்திருக்கிறார்கள்?’ என்பதிலிருந்து, ‘நமது வெளிநாட்டுக் கொள்கைபற்றி இவர் என்ன சொல்வார்!’ என்ற கவலை வரை பல எண்ணங்கள். அமெரிக்க நிருபர்கள் உள்ளங்களிலோ வியத்நாமுக்கு என்ன பதில்? என்ற கேள்வி.

சிகரம் வைத்தாற்போல் ஒரு நிகழ்ச்சி நடந்தது. பேராசிரியர் லிண்பிளாம். அண்ணாவை டாக்டர் பட்டத்துக்குப் படிக்கும் இருபத்தி இரண்டு மாணவர்கள் கொண்ட வகுப்புக்கு அழைத்துச்செல்கிறார். யேல் பல்கலைக்கழகம் அமெரிக்காவிலேயே புகழ்பெற்ற ஐவி லீக் (Ivy League) பல்கலைக்கழகம். அதன் மாணவர்கள்– அதிலும் டாக்டர் பட்டத்துக்குப் படிப்பவர்கள் என்றால் மணியான மாணவர்கள் என்று அர்த்தம் – அந்த மாணவர்கள் இந்தியப் பிரச்சினைகளைச் சிறப்பாகப் படித்து அலசி வைத்திருப்பவர்கள். அண்ணாவோ அப்போதுதான் மூன்றாம் ஆண்டு கல்லூரி மாணவர்களுடன் மதிய உணவு



அருந்திவிட்டு விவாதம் நடத்திவிட்டுச் செல்கிறார்.

பேராசிரியர் லிண்பிளாம், அண்ணாவை நோக்கி “ஒரு பத்து நிமிடம் பேசுங்களேன். பின் “விவாதம் தொடங்கலாம்” என்கிறார். அண்ணாவோ விவாதமே தொடங்குவோம். ஏன் பேச்சு?” என்கிறார் அடுத்து. பேராசிரியர் விண்பிளாம் “ஒன்றும் லேசாக எடுத்துக்கொள்ளாதீர்கள்” என எச்சரிப்பதுபோலவும், அறிவிப்பதுபோலவும் “மாணவர்களெல்லாம் நன்கு விஷயம் தெரிந்தவர்கள்” என்கிறார். “அப்படியானால் ரொம்ப நல்லதாய்ப்போயிற்று. கேள்விகள் குறைவாக இருக்கும்!” என்று கூறுகிறார் அண்ணா!

அண்ணா வரும் முன்னரே யேல் பல்கலைக் கழகம் பத்திரிகைக்கு ஓர் அறிக்கை வெளியிட்டிருந்தது. அதில் அவர் மூன்றரைக் கோடி மக்களின் தலைவர் என்பதையும், திமுகவின் அசாதாரண வெற்றியையும், அண்ணா பத்திரிகையாளராக வாழ்வைத் தொடங்கியதையும், தமிழ்த் தேசிய உணர்வின் மூலம் அரசியலில் புகுந்ததையும், பச்சையப்பன் கல்லூரியில் படித்ததையும் குறிப்பிட ப்பட்டிருந்தது.

யேல் பல்கலைக்கழகத்தின் ஒரு பகுதியான டிமோதி டுவைட் கல்லூரி அவருக்கு ‘சப்’ (Chubb) உறுப்பினர் என்ற கௌரவத்தை அளித்தது இதுவொரு தனிக் கௌரவம் இதன்படி ‘சப்’ உறுப்பினர் ஐந்து நாட்கள் கல்லூரியில் தங்கி மாணவர்களுடனும் ஆசிரியர்களுடனும் பேசவும் விவாதிக்கவும் செய்வார்கள்.

யேலில் தங்கியபோது, பி.ஏ. படிக்கும் மாணவர்கள், டாக்டருக்கும் படிக்கும் மாணவர்கள் அரசியல் பேராசிரியர்கள். இந்தியா சென்றுவந்த அமெரிக்கர்கள் என வெவ்வேறு கூட்டங்களில் வெவ்வேறு சமயங்களில் அண்ணா பேசினார்.

மாணவர்கள் அன்பினால் ஆர்வத்தினால்



அண்ணாவைத் துளைத்து எடுத்தார்கள் அண்ணா கூறினார்: “இத்தாலியில் போப்பைப் பார்த்து விட்டு வந்தேன் அங்கே சுமார் 30 மாணவர்கள் என்னைப் பார்க்க வந்திருந்தார்கள் பாரீஸுக்குப் போனேன். அங்கே சுமார் ஆறு ஏழு இந்தியர்கள் வேலையில் இருப்போர் வந்திருந்தனர். இங்கோ நான் எதிர் பார்க்கவில்லை. இவ்வளவு பேர் வந்திருக்கிறீர்கள்.”

“அண்ணாதுரையிடம் நீங்கள் என்ன சொல்லப்போகிறீர்கள்” என்று கேட்கிறேன் டாக்டர் சக்குபாயும் ஆறுமுகமும் கூறுகிறார்கள். “மொழிக் கொள்கையில் உறுதியாக இருங்கள் என்று கூறப் போகிறோம்.

அண்ணாவின் அருகில் வசதியான இடத்தைப் பிடித்து உட்கார்ந்து கொண்ட கண்ணாடிக்காரர் “மொழிப் பிரச்சினை உள்நாட்டுப் போரில் முடியுமோ என அஞ்சுகிறேன்” என்கிறார்.

“இத்தாலியில் வடக்கு வளத்துடனும் தெற்கு ஏழ்மையிலும் இருக்கிறது செல்வம் கொழிக்கும் அமெரிக்காவில்கூட ஏழ்மையும் இன வேறுபாடும் கொண்ட கருப்பர்கள் வாழும் பகுதிகள் இருக்கின்றன. இந்தப் பிரச்சினைகள் –வேறுபாடுகள் – உள்நாட்டுப் போரையா கொண்டுவந்துவிட்டன? பிரச்சினையிலிருந்து நழுவப்பார்ப்பவர்கள் உள்நாட்டுப் போர் வந்துவிடும்’ என்று பயமுறுத்திப் பிரச்சினையில் இருந்து தப்பிக்கப்பார்க்கிறார்களோ என்றுதான் நான் அஞ்சுகிறேன். நாம் பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டும் அவற்றிடமிருந்து நழுவ முயலக்கூடாது.

“உங்கள் கொள்கைகளால் இந்திய ஒற்றுமை பாதிக்கப்படுகிறதே” என்கிறார் ஒருவர் கவலை தொனிக்க.

“நாங்கள் பிரிவினைக் கொள்கையை நிச்சயமாகக் கைவிட்டு விட்டோம். நான் ராஜ்ய சபையில் அதுபற்றிப் பேசியபோது ராஜ்ய சபை மெம்பர்கள் என்னை வானளாவப் புகழ்ந்தார்கள். ‘இனி எல்லோரும் ஒற்றுமையாகச் சேர்ந்து வாழ்வோம்’ என்றார்கள்... நான், ‘மலபாரில் ஜன நெருக்கம் மிக மிக அதிகமாகியிருக்கிறது. மக்கள் வாழ். பயிர் செய்ய இடமில்லாது இருக்கிறார்கள். ஆகவே, ஒரு கோடி மக்களை பிஹாருக்கோ, ராஜஸ்தானுக்கோ குடியேற்றுவோம். என்ன சொல்லுகிறீர்கள்? என்றேன். அது பெரிய அபாயமான புதிய பிரச்சினைகளைக் கொண்டுவரும்’ என்றார்கள்! நீங்கள் ஒற்றுமையைப் பற்றிப் பேசுகிறீர்கள் ஏதோ நாங்கள் குறுக்கே நிற்பதுபோல! அஸ்ஸாமிலே ‘அஸ்ஸாம் அஸ்ஸாமியருக்கே இந்தியர்களே வெளியேறுங்கள்’ என்று போர்டு போட்டுக் கிளர்ச்சி நடந்தது.”

“உங்கள் கல்விக் கொள்கைகளைக் காட்டி டில்லி அரசாங்கம் ஒன்றும் இடையூறு கொடுக்காதா?”

கல்வி ஒரு மாநில விஷயம். டில்லிக்கு அதில் உரிமை ஏதும் கிடையாது” என்று அழுத்தம் திருத்தமாகக் கூறுகிறார் அண்ணா.

★ ★ ★

“உங்கள் பண்ணையில் இரண்டாயிரம் மூவாயிரம் ஏக்கர் என்று வைத்துக்கொண்டு பெரிய இயந்திரங்களுடன் விவசாயம் பண்ணுகிறீர்கள் எங்கள் நாட்டிலோ 30 ஏக்கருக்கு மேல் ஒருவர் நிலம் வைத்துக்கொள்ளக் கூடாது என்று சட்டம் கொண்டுவந்திருக்கிறோம் எங்கள் ஊரில் மக்கள் தொகை அதிகம் ஆகவே, உங்கள் முறைகளைக் காப்பியடிக்க முடியாது எங்கள் நிலங்களுக்கேற்ப விவசாய அபிவிருத்தி செய்கிறோம்” என்கிறார் அண்ணா யேலில் செவ்வாய் மாலையிலிருந்து வியாழன் மாலை வரை மாணவர்கள், பேராசிரியர்கள் என்று பேச்சும் விவாதமுமாக நாட்கள் சென்றன. மாணவர்கள் திரும்பத் திரும்ப மொழிப் பிரச்சி னையைப் பற்றிக் கேட்டார்கள் வியத்நாம் பற்றிக் கேட்டார்கள் இஸ்ரேல் பற்றிக் கேட்டார்கள் இந்தியாவின் பஞ்சம் பற்றிக் கேட்டார்கள் மக்கள் பெருக்கம் பற்றிக் கேட்டார்கள் சாதி பற்றிக் கேட்டார்கள்,

தென்னாற்காடு மாவட்டத்தில்தான் வன்னியர் இன மக்கள் அதிகம் அங்கே எப்போதும், எல்லா கட்சிகளும் சாதிக்காரரையே வேட்பாளராக நிற்கச் சொல்வார்கள். ஆனால், நாங்களோ அந்தத் தொகுதியில் வன்னியர் அல்லாத மக்களை நிறுத்தி வெற்றிபெற்றோம்.

சாதி மனோபாவம் மாற கலப்பு மணங்களை ஆதரிக்கிறோம். கலப்பு மணம் செய்துகொள்கிறவர்களுக்குத் தங்கமெடல் தகுகிறோம். இது ஒன்றும் வெட்கப்படவேண்டியவிஷயம் அல்ல. பெருமைப் பட வேண்டிய விஷயம் என்ற மனோபாவத்தை இப்படி வளர்க்கிறோம் – என்றார் அண்ணா. உங்கள் நாட்டுக்கு ஜனநாயகம் புதிதாகையால், எப்படி ஜனநாயகம் நிலை க்கப்போகிறது என்கிற பயம் பலர் மனத்தில் இருக்கிறது” என்று ஒருவர் கூறுகிறார்.

ஜனநாயகம் எங்களுக்குப் புதிதல்ல 2000 ஆண்டுகட்கு முன்பே பனை ஓலையில் நாங்கள் விரும்புவோரின் பெயரை எழுதி ஒரு மண் பானையில் போட்டு (குடவோலை) நாட்டாண்மைக்காரரைத் தேர்ந்தெடுத்தார்கள். ஆகவே நீங்கள் நினைப்பதுபோல ஜனநாயகம் எங்களுக்குப் புதிதல்ல! என்று அண்ணா மேலே தொடருகிறார் காவிரி நதி ஓரத்தில் விளை யாடினாள் கங்கை நதி தீரத்தில் புகழ் பாடினான் என்றும், புகழ் பெற்ற கடாரங்கொண்ட சோழனைப் பற்றியும் பேசுகிறார் தமிழ்நாட்டின் பழைய சரித்திரத்தை முன்வைக்கிறார்.

விவாதம் பிறகு இந்தி மொழியைப் பற்றித் திரும்புகிறது. வட இந்திய மாணவர்கள் சிலர் பொறுமையுடனும் பொறுப்புடனும் கேள்விகளைக் கேட்கிறார்கள். இந்தி மாநில மக்களே இந்தி பற்றித் தெரிந்துகொள்ள வேண்டிய பல செய்திகள் அண்ணாவிடமிருந்து வெளிவருகின்றன.

இந்தி பொதுவாக மூன்று மாநிலங்களில் பேசப்படுகிறது அங்கும் இதுவரை இந்தி மொழி ஓர் ஒருமைப்பாட்டைப் பெறவில்லை. ராஜஸ்தான் வழியே ரயிலில் பயணித்துக்கொண்டிருந்தோம். எங்களுடன் கூட ஓர் இந்தி மொழிபெயர்ப்பாளர் இருந்தார். ஆனால், ராஜஸ்தான் மக்கள் பேசிய மொழியை அவரால் அறிந்துகொள்ள முடியவில்லை.

“டில்லியில் காங்கிரஸ் அரசாங்கமும் சென்னையில் எதிர்க்கட்சி அரசாங்கமும் இருப்பதை நீங்கள் வரவேற்கிறீர்களா?” என்ற கேள்விக்கு அண்ணா பதிலளித்தார். இந்திரா காந்தி திறமையாக நிர்வாகம் செய்துவருகிறார் மொழி விஷயத்தில் தான் சிறிது அவசர முடிவை எடுத்துவிட்டார். டில்லியில் அரசாங்கப் பொறுப்பை ஏற்கும் அளவுக்கு மற்ற எதிர்க் கட்சிகள் வளரவில்லை. இந்நிலையில், நாட்டின் எதிர் காலத்தைப் பொறுத்தவரை மீண்டும் காங்கிரஸ் ஆட்சி வருவதையே விரும்புவேன்”

அண்ணா தன் எல்லையைப் பூரணமாக அறிந்திருந்தார். வெளிநாட்டுக் கொள்கையைப் பற்றி அறிந்திருந்தார் வெளிநாட்டுக் கொள்கையைப் பற்றிக் கேட்டபோதெல்லாம். “அது டில்லி விஷயம் அதில் மாநில அரசாங்கத்துக்கு ஏதும் உரிமை இல்லை எனினும், இந்திய அரசாங்கத்தின் வெளிநாட்டுக் கொள்கையுடன் பொதுவாக எங்களுக்கு உடன்பாடு உண்டு” என்று அழகுடனும் அடக்கத்துடனும் கூறினார்.

டில்லி –சென்னை உறவு பற்றியும், பொதுவாக மத்திய – மாநில உறவு பற்றியும் பேசியபோது தன் சங்கடங்களைத் தெரிவித்தார் “டில்லி ஐந்தாண்டுத் திட்டங்களை அகில இந்தியாவுக்குமாகத் தீட்டித் தருகிறது. அதைவிட மொத்தப் பணத்தை எல்லா மாநிலங்களுக்குமாக ஒரு கணக்குப்படி பங்கிட்டுக் கொடுத்தால், நமக்கு வேண்டியதை நாம் விரைவில் செய்ய முடியும். மாநிலங்களுக்கிருக்கும் தடைகளை இந்திரா காந்தி உணராமல் இல்லை. ஆனால், அவர் ஒன்றும் செய்ய முடிவதில்லை. ஏனெனில், அப்படி ஓர் அரசியல் அமைப்பு நாட்டில் புழக்கத்தில் இருக்கிறது அதை மாற்ற வேண்டும்.”

“பாருங்கள், சென்னையில் காங்கிரஸ் கட்சி ஆட்சியில் இருந்தபோதே. சேலத்துக்கு ஓர் உருக்காலை வேண்டுமெனக் கேட்டார்கள். டில்லி அரசாங்கம் பணமில்லை என்று தட்டிக்கழித்தது. பின் சென்னை அரசாங்கம் ‘நாங்களே பணம் போட்டுத் தொடங்கிக்கொள்கிறோம். லைசென்ஸ் மட்டும் தாருங்கள்’ என்றார்கள். பதிலில்லை, நாங்கள் வந்த பின்னும் அது பற்றி விரிவாக எழுதினோம். டில்லியிலிருந்து பதிலில்லை. கடந்த நான்கு ஆண்டுகளாக அந்த ‘பைல்கள்’ டில்லியில் தூங்கு கின்றன.”

பேச்சை நிறுத்துகிறார் எங்கும் ஓர் அமைதி நிலவுகிறது.

மாநில அரசாங்கம் ஏதோ பெரிய பஞ்சாயத்து போர்டு போல நம் கண் முன் நிற்கிறது. அண்ணா அதனால்தான். ‘மாநிலங்கள் அதிக சுதந்திரம் பெற வேண்டும் டில்லியின் இறுக்கம் குறைய வேண்டும். அமைப்பு மாற்றப்பட வேண்டும் என்று அடிக்கடி கூறிக்கொண்டிருந்தார்

சென்னைக்கான திட்டங்கள் பற்றிக் கூறியபோது, அமெரிக்க விஜயத்தின் எதிரொலியை அவர் கருத்துகளில் காண முடிந்தது.

ஊருக்குச் சென்றதும் நம் நாட்டிலுள்ள படித்தவர்களை விவசாயத்திலும் பால் பண்ணையிலும், கோழி. ஆடு வளர்ப்புத் துறை களிலும் ஈடுபடுமாறு கேட்டுக்கொள்ளப்போகிறேன். சென்னையைச் சுற்றிக் கடல் இருக்கிறது. ஆகவே கடல் சம்பந்தமான தொழில்களைத் தொடங்கப்போகிறோம். பிரான்ஸில் நமக்குப் பல ‘டோரிஸ் மின் விசைப் படகுகளைத் தந்தார்கள். இன்னும் தருவதாக வாக்களித்திருக்கிறார்கள். விஞ்ஞான முறையில் மீன் பிடிக்கும் முறையை நம் மீனவர்களுக்குக் கற்றுத் தரப்போகிறோம். சென்ற ஆண்டு விஷயம் தெரியாமல் சிறிய மீன்களையெல்லாம் பிடித்துச் சில இடங்களில் மீன் அதிகம் இல்லாமல் செய்துவிட்டார்கள். உணவைப் பாதுகாக்கப் பல இடங்களில் பல குளிர்சாதன அறைகளைக் கட்டப்போகிறோம். தூத்துக்குடி துறைமுகத்தை அபிவிருத்தி செய்யப்போகிறோம். தெற்கே விசாகப்பட்டினம், கொச்சி தவிர மற்ற துறைமுகங்கள் உபயோகத்துக்குக் கொண்டுவராமல் இருக்கின்றன. மொரீஷஸ் தீவுகளில் நிறையத் தமிழர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு உதவ தமிழ் சொல்லிக்கொடுக்க என்ன செய்யலாம் என்று அறிந்துவர விரைவில் நமது மந்திரிகள் செல்லப்போகிறார்கள்!”

அண்ணா பேசி முடிக்கிறார் “தமிழகத்தில் இன்னும் பல துறைகளில் பல காரியங்கள் செய்ய வேண்டியிருக்கிறதே” என்று குறிப்பிட்டு அண்ணாவின் முகத்தை நோக்குகிறார் ஒருவர் அண்ணா கூறுகிறார் “ஓர்ஆயிரங்கோடி ரூபாய் இருந்தால் எல்லாவற்றையும் உடனே செய்துவிடலாம்!” என்கிறார்

அவர் முகத்தில் ஒரு மென் சிரிப்பு மலர்கிறது!

**நன்றி:**
**“மாபெரும் தமிழ்க் கனவு” நூல்**
**‘இந்து தமிழ் திசை’**

**“ஊருக்குச் சென்றதும் நம் நாட்டிலுள்ள படித்தவர்களை விவசாயத்திலும் பால் பண்ணையிலும், கோழி. ஆடு வளர்ப்புத் துறைகளிலும் ஈடுபடுமாறு கேட்டுக்கொள்ளப்போகிறேன். சென்னையைச் சுற்றிக் கடல் இருக்கிறது ஆகவே கடல் சம்பந்தமான தொழில்களைத் தொடங்கப்போகிறோம் பிரான்ஸில் நமக்குப் பல ‘டோரிஸ் மின் விசைப் படகுகளைத் தந்தார்கள். இன்னும் தருவதாக வாக்களித்திருக்கிறார்கள். விஞ்ஞான முறையில் மீன் பிடிக்கும் முறையை நம் மீனவர்களுக்குக் கற்றுத்தரப்போகிறோம். சென்ற ஆண்டு விஷயம் தெரியாமல் சிறிய மீன்களையெல்லாம் பிடித்துச் சில இடங்களில் மீன் அதிகம் இல்லாமல் செய்துவிட்டார்கள். உணவைப் பாதுகாக்கப் பல இடங்களில் பல குளிர்சாதன அறைகளைக் கட்டப்போகிறோம்.”**



## சம்பளத்தை மதிய உணவுத் திட்டத்துக்குக் கொடுத்த அண்ணா!

காமராஜர் ஆட்சியில் பள்ளிக்கல்வித் துறை இயக்குநராக இருந்தவர் நெ.து.சுந்தரவடிவேலு. காஞ்சிபுரம் நகரில் உள்ள பள்ளிகளுக்கெல்லாம் சேர்த்து ஒரே இடத்தில், தனியார் பங்களிப்புடன் கூடிய மதிய உணவு மையத் தொடக்க விழாவுக்கு அவர் அத்தொகுதியின் சட்டமன்ற உறுப்பினரான அண்ணாவை அழைத்தார். “நான் வந்தால், உங்கள் மீது அரசியல் சாயம் பூசிவிடுவார்களே?” என்று தயங்கிய அண்ணா, விழா தொடங்கும் நேரத்தில் வந்துவிட்டார். விழாவில் பேசிய அவர், “நான் சட்டமன்ற உறுப்பினராகத் தேர்வுசெய்யப்பட்டதால், எதிர்பாராது மாதம் நூற்றைம்பது ரூபாய் கிடைக்கிறது. அதில் ஐம்பது ரூபாயை மாதந்தோறும் இத்திட்டத்துக்கு நன்கொடையாகத் தருகிறேன்* என்று அறிவித்துவிட்டார். சொன்னபடியே நிதி தரவும் செய்தார்.”

நன்றி
‘மாபெரும் தமிழ்க் களவு’ நூல்
இந்து தமிழ் திசை

## ஆற்றோரம்!



அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் திடீர் என்று அண்ணா ஆற்றோரம் என்ற தலைப்பில் பேசுவர் என்று அறிவித்தனர்.

நாம் மாலை நேரங்களில் ஆற்றங்கரைகளில் அமர்ந்து எதையெல்லாம் பேசுவோமோ அதையெல்லாம் நான் பேசிவிடுவேனோ என்று எண்ணி வருந்தாமலும் ஏமாறாமலும் இருக்கலாம் என்று தம் உரையைத் தொடங்கி உலக நாகரிகங்கள் பலவும் பல ஆற்றோரங்களில் தோன்றிய வரலாற்றை எடுத்தியம்பி நைல்நதி நாகரிகம் முதலிய பல நாகரிகங்களையும் குறிப்பிட்டு அவ்வுரையைக் கேட்டுக் கொண்டிருந்த எங்கள் அனைவரையும் உலகம் முழுக்க அழைத்துச் சென்று காட்டி உரைத்துவிட்டு ஈற்றயலாகக் கங்கைக்கரையில் இறக்கிவிட்டு அங்கு வந்து குடியேறிய சிந்து நாகரிகத்தை விளம்பி இறுதியாக எம்மைக் காவிரிக் கரைக்கு அழைத்து வந்து சேர்த்த அண்ணா பஃறுளியாற்று நாகரிகமும் காவிரிக் கரை நாகரிகமும் ஒன்றே என மொழிந்து உலக நாகரிகங்களின் தாயாகிய திராவிட நாகரிகம் தோன்றிய இடத்தின் இன்றைய குறியிடமாகிய காவிரிக்கரையிலிருந்து இந்திய வரலாறு எழுதப்பட வேண்டும் என முரசறைந்து தம் உரையை குறைசிறிதுமின்றி நிறைவு செய்தார்.

மாணவர்களின் கைதட்டல் அடங்க நீண்ட நேரம் ஆனது.

### உழைப்பு!

**வாழ்க்கையில் நாம் உயர்ந்த பொருட்களைப் பெற வேண்டுமானால் சலியாத உழைப்பும் தளராத உக்கமும், வியாமுயற்சியும் மிக மிக அவசியம்.!**

**- அண்ணா**

# தி.மு.க. கொடி! அண்ணா விளக்கம்



“நீண்ட சதுரவடிவத்தில் மேல் சரிபாதி கறுப்பு நிறமாகவும், கீழ் சரிபாதி சிவப்பு நிறமாகவும் அமைந்திருக்க வேண்டும். கறுப்பு: அரசியல் பொருளாதார, சமுதாய வாழ்விலுள்ள இருண்ட நிலையை உணர்த்தி நிற்கும் அறிகுறியாகும். சிவப்பு: அம்மூன்று துறையிலும் உள்ள இருண்ட நிலையைப் போக்கி ஒளி நிலையை உண்டாக்கும் அறிகுறியாகும். இருண்ட நிலையை ஒளிநிலை அழித்துக் கொண்டுவர வேண்டும் அழித்துக்கொண்டு வருகிறது.

‘இருண்ட வானின் அடியில் தோன்றி எழும்பும் இளம்பரிதி ஒளிபோலக் கறுப்பு மேலும் சிவப்பு கீழும் வைக்கப்படுகின்றன. உலகெங்கும் இழிவுக்கு தாழ்வுக்கு அடிமைக்கு அறியாமைக்குக் கொண்டிருக்கும் நிறம் கறுப்பு. இயற்கைப்படி பார்த்தாலும் இருளின் நிறம் கறுப்பு: ஒளியின் நிறம்



சிவப்பு.

இருண்டு கிடக்கும் திராவிடத்தை ஒளிபெற்ற திராவிடமாக ஆக்க வேண்டும். வீழ்ச்சியுற்ற திராவிடத்தை எழுச்சியுறச் செய்ய வேண்டும் என்பதை உணர்த்துவதன் பொருட்டுதான் மேலே கறுப்பு வண்ணமும் கீழே சிவப்பு வண்ணமும் கொடியில் மிளிர்கின்றன.

திராவிடம் இன்று இருக்கும் நிலையைக் கறுப்பும். இனி இருக்க வேண்டிய நிலையைச் சிவப்பும் உணர்த்துகின்றன. செஞ்ஞாயிற்றின் ஒளி எழ எழ இருட்படலம் மறைவதுபோல் புரட்சி ஓங்க ஓங்க இழிவு ஒழிய வேண்டும் என்பதாகக் கொடி ஏந்தும் நிலையிலும் கொடி ஏற்றும் நிலையிலும் கூறுகிறது. இதையே கழகக் கொடியாக அமைத்துக்கொள்ளுமாறு கழகத் தோழர் களையும் கிளைக் கழகங்களையும் கேட்டுக்கொள்கிறேன் .”

**சி.என்.அண்ணாதுரை**
பொதுச்செயலாளர்
திராவிட முன்னேற்றக் கழகம்
நன்றி:
**‘மாபெரும் தமிழ்க் கனவு’ நூல்**
**இந்து தமிழ் திசை**